



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை சீவலப்பேரி சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீச்சல் வளாகத்தில் பள்ளிகளுக்கு இடையிலான மாநில அளவில் நடைபெறும் பாரதியார் தின மற்றும் குடியரசு தின நீச்சல் போட்டிகள் நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று கொடியசைத்து துவக்கி வைத்து வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப.கார்த்திகேயன், மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெகதீஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி உள்பட பலர் உள்ளனர்.



வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி மூர்த்தி நேற்று முன்தினம் (21.01.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத் துறை அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு வணிகர் நல வாரியம் சார்பாக மறைந்த வணிகர்களின் குடும்பத்தினரான திருத்துறைப்பூண்டியைச் சார்ந்த திருமதி .ரா. பவானி, சேலத்தைச் சார்ந்த திருமதி மே. உஷா ஆகியோர்க்கு குடும்ப நல நிதி உதவித் தொகையாக தலா ரூ.3,00,000/– க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், வணிகவரித் துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், ஆகியோர் உடனிருந்தனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# பாளை பகுதிக் கழகம் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி - சூர்யா வெற்றிகொண்டான் - டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

நெல்லை, ஜன. 23 -

கழக இளைஞர் அணி செயலாளர் , துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாள் இளைஞர்களின் எழுச்சி நாளினை முன்னிட்டு பாளை பகுதி கழகம் சார்பில் நெல்லை பாளையங் கோட்டை பேருந்து நிலையம் எதிரில் உள்ள ஜோதிபுரம் திடலில் மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

கழக இளைஞர் அணி செயலாளர் , துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 48வது பிறந்தநாளை முன்னிட்டு பாளையங் கோட்டை பகுதி கழகத்தின் சார்பில்

21.01.2025ம் தேதி பாளையங்கோட்டை பேருந்து நிலையம் எதிரில் உள்ள ஜோதிபுரம் மைதானத்தில் வைத்து மாபெரும் பொது கூட்டம் மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் அருள் மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் மைக்கேல் ராஜேஷ் வரவேற்புரை யாற்றினார்.

இந்நிகழ்வில் கழக சட்டத்துறை இணை செயலாளர் தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆகியோர் உரையாற்றினர்.

பின்னர் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று பேசியதாவது:-

தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி செய்யும் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4 ஆண்டுகளில் 40 ஆண்டுகால சாதனையை செய்து முடித்துள்ளார். மகளிருக்கு உரிமை தொகை உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை முதல்வர் கொண்டுவந்துள்ளார். தாய்மார்கள் நன்றி மறவாதவர் என்ற அடிப்படையில் இந்த திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது. தாய்மார்களை மதித்து உணர்ந்து ஆட்சி நடத்தியவர் தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

நாடகமாடுவதில் தி.மு.க கைதேர்ந்தவர்கள் என நேற்று முளைத்தவ ரெல்லாம் சொல்கிறார். அவரும் ஒரு நடிகர் என்பதை மறக்கக்கூடாது.முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் எழுதிய வசனத்திற்கு அவரது அப்பா தான் டைரக்சன் செய்து கொண்டிருந்தவர், வசனம் எழுதி, நடிக்க வைத்து அறிமுகம் செய்தவர் கலைஞர்தான் என்பதை மறந்துவிடக் கூடாது.

**தி.மு.க.வை எதிர்த்தவர்கள் வாழ்ந்ததாக வரலாறில்லை!**

தி.மு.க.வை எதிர்த்தவர்கள் வாழ்ந்ததாக இல்லை. பழைய வரலாறு நிறைய உண்டு. முதன் முதலில் தி.மு.க ஆட்சியில் தான் பெண் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர். சசிகலா என்ற பெண்மணி போட்ட பிச்சையால் முதல்வர் பதவியை பெற்றவர் எடப்பாடி பழனிச்சாமி. கலைஞர் அவர்கள் மறைந்த போது மெரினாவில் இடம் கொடுக்க மறுத்தவர், வாழ்நாள் முழுதும் பல தலைவர்களுக்கு மணிமண்டபம் கட்டியவர் கலைஞர் அவர்கள். முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆருக்கு சமாதி கட்டி கொடுத்தவர் கலைஞர்தான் என்பதை மறக்கக்கூடாது.

வாரம் ஒரு முறை தமிழகத்தின் ஊர் ஊராக வந்து மோடி பொய்யாக பேசி சென்றார்.

**வயிற்றெரிச்சலில் பேசுகிறார் பழனிச்சாமி!**

அத்தனையும் சந்தித்து 40க்கு40 நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதற்கு மகளிர்தான் காரணம். எம்.ஜி.ஆருக்கு ஏஜெண்டாக தேர்தலில் செயல்பட்டவன் நான். தமிழகம் முழுதும் கலைஞருடன் பிரச்சாரம் செய்தவன்,எம்.ஜி.ஆர் பிரச்சார இடத்திற்கு வந்து விட்டால் புற்று ஈசல் போல் சாரை சாரையாக மக்கள் கூட்டம் வந்துவிடும். எம்.ஜி.ஆருக்கு வந்தது போல் இப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மகளிர் கூட்டம் அதிகமாக வருகிறது.இந்த நாடாளுமன்ற தேர்தலில் ஆண்கள் வாக்குகளை விட பெண்கள் வாக்குகள் தான் அதிகமாக தி.மு.க.வுக்கு வந்தது.பட்டியலின மக்கள் வாழும் பகுதியில் 100க்கு 90 சதவீத வாக்கு தி.மு.க.வுக்கு கிடைத்தது. மக்கள் ஆதரவை தாங்கி கொள்ளமுடியாமல் வயிற்றெரிச்சலில் எடப்பாடி பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என பேசுகிறார்.

அ.தி.மு.க. ஆட்சியில் டி.ஜி.பி.யால் பெண் எஸ்.பி.க்கே பாதுகாப்பில்லாத நிலை இருந்தது. அ.தி.மு.க ஆட்சியில் பல மோசமான செயல்கள் நடந்தது.அதனை கிளறினால் நீங்கள் தாங்க மாட்டீர்கள். தமிழகத்தின் இளைஞர்களை சீமான் ஏமாற்றுகிறார். சட்டபடி நாம் தமிழர் என்ற பெயரை பயன்படுத்தக் கூடாது.நாம் தமிழர் கட்சியை 1969 ல் சி . பா . ஆதித்தனார் தி.மு.க.வில் இணைத்துவிட்டார்.சீமான் போர்ஜரியாக நாம் தமிழர் என்ற பெயரை பயன்படுத்துகிறார்.நான் நீதி மன்றத்தை நாடினால் அந்த பெயரையே இனி சீமான் பயன்படுத்தமுடியாது.பிரபாகரன் படத்தை ஒட்டி வைத்து சீமான் போர்ஜரி செய்து வருகிறார். விடுதலை புலிகள் பிரபாகரன் அவரது சீடர்கள் 48 பேரை ஜாமீன் மீதான வழக்கில் நான் ஆஜராகி காப்பாற்றிய கட்சி தி.மு.க என்பதை சீமான் மறக்கக்கூடாது.

பிரபாகரனையும் விடுதலை புலிகளையும் காப்பாற்றியது தி.மு.க.மற்ற கட்சிகள் எல்லாம் பிரபாகரனை வைத்து பிழைப்பு நடத்தி வருகின்றனர்.

**பரந்தூர் மக்கள் தி.மு.க.வையே விரும்புகின்றனர்!**

கலைஞரையோ, பெரியாரையோ இனி சீமான் பேசினால் ஒருவன் சாகதுணிந்தால் உன் நிலைமை என்ன என்பதை யோசிக்க வேண்டும். பரந்தூர் விமான நிலைய பிரச்சினையில் ஒரு நடிகர் நேற்று நாடகம் ஒன்றை ஆடினார். ஸ்டாலின் வீட்டுக்காகவா விமான நிலையம் கேட்கிறார்.தூத்துக்குடி விமான நிலையத்தை மதுரைக்கு நிகராக கனிமொழி கருணாநிதி முயற்சியால் மாற்றியுள்ளார். பரந்தூர் விமான நிலையத்திற்கு இடம் கொடுக்க மக்கள் தயாராக உள்ளனர்.விமான நிலைய பிரச்சினை குறித்து முன்ன பின்ன விசாரிக்காமல் விஜய் பேசுகிறார். பரந்தூரில் விஜய் வியாபாரம் செய்துள்ளார்.நாடாளுமன்ற தேர்தலில் பரந்தூர் பகுதியில் 51 சதவீதம் தி.மு.க.வுக்கு தான் விழுந்துள்ளது. இதில் தி.மு.க.வை அப்பகுதி மக்கள் விரும்புகிறார்கள் என்பதே அர்த்தம்.பரந்தூர் பகுதி வாக்குசாவடியில் அனைத்துக் கட்சிகளைவிட தி.மு.க.விற்கு தான் அதிக வாக்குகள் கிடைத்துள்ளது . யார் என்ன சொன்னாலும் மகளிர் தி.மு.க பக்கம் உள்ளனர்.2026 ல் மீண்டும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை முதல்வராக்க உறுதிஏற்போம்.

இவ்வாறு கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேசினார்.

நிகழ்வில் மாநகராட்சி மேயர் மகிருஷ்ணன்,பாளையங்கோட்டைசட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் வசந்தம் ஏசி ஜெயக்குமார், திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் ச.முத்துச்செல்வி,மாநில நெசவாளர் அணி செயலாளர் விளாத்திகுளம் சட்ட மன்றத் தொகுதி பார்வையாளர் பெருமாள், மாநில சட்ட திட்டக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், தச்சநல்லூர் பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான், ராஜவர்மன். பத்மராஜ், ஜெயின் உசைன், எம்.எஸ்.ராஜ், மனோகரன், ராபர்ட் செல்லையா, கிங் பாலா,கேபிள் குமரேசன், அந்தோணி, வேல்முருகன், பிரேம் கணேசன், லெனின், காஜா முகைதீன், மாரிமுத்து, ஆவின் கல்யாணி, பால்மகேஷ், தி.மு.க. நிர்வாகிகள் வேங்கை வெங்கடேஷ், அவதார் ஷாஜகான், ஷெட்டி, பத்மா, சௌந்திரம், மேரி, பிந்து, ஆனி, ராஜேஸ்வரி, நர்மதா, சுப்புலட்சுமி, சித்ரா, வழக்கறிஞர் ஜெயபிரபா, சிவா, பீர் மஸ்தான், செந்தில்குமார், மகாராஜன், சார்லஸ், கணேச பெருமாள், வின்சென்ட் வினோத், மணிகண்டன், அப்துல், ராமச்சந்திரன், கிருஷ்ணகுமார், அந்தோணிராஜ், முத்து சுப்பிரமணியன், பார்வின், மைக் மணி, முத்தையா, திராவிட மணி, ராவணன், மில் குமார், ராஜா அப்பாஸ், வினோத், கோபால், சங்கர், மஸ்தான், உமர், சாதிக், ஹாமிம் முஸ்தபா, உசைனி, அக்பர் அலி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிறைவில் 32வது வட்டச் செயலாளர் கதிரேசன் நன்றி யுரையாற்றினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பாளையங்கோட்டை பகுதி செயலாளர் அண்டன் செல்லத்துரை செய்திருந்தார்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி திமுக சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம் வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவரும், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.ஜெ.மணிக்கண்ணன் தலைமையில் உளுந்தூர்பேட்டை ஜெயராம் தெய்வானை திருமண மண்டபத்தில் நடைபெற்றது, இக்கூட்டத்தில், வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் முன்னிலை வகித்து பேசுகையில், அனைத்து ஒன்றிய நகர கழகத்தின் சார்பில் பாகநிலை முகவர்கள் (பி.எல்.ஏ2) மற்றும் பாகநிலை உறுப்பினர்களுடன் (பி.எல்.சி) ஆய்வு & ஆலோசனைக்கூட்டம் நடத்துவது குறித்தும், பல்வேறு கழக ஆக்கப்பணிகள் குறித்தும் நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார், மேலும் இக்கூட்டத்தில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தலைமை செயற்குழு உறுப்பினரும் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான இரா.ஸ்ரீதரன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### யு.ஜி.சி புதிய விதிகளை திரும்பப் பெற வலியுறுத்தி

# முதல்வர் கொண்டு வந்த தனித் தீர்மானம் !

## ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது! இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, ஜன. 23-

இதுகுறித்து ஆதித்தமிழர் பேரவை இரா.அதியமான் விடுதுள்ள அறிக்கை வருமாறு;



கல்வி உரிமையையும் சமூக நீதியையும் அழிக்க நினைக்கின்ற வகையில் யு.ஜி.சி யின் வரைவு விதிமுறையை அறிவித்திருக்கிறது ஒன்றிய பாசக அரசு.

இந்த U.G.C விதிமுறையை நாம் ஏற்பதற்க்கில்லை என்பதோடு ஒன்றிய அரசு இதை திரும்ப பெற வேண்டும் என்று முதல்வர் அவர்கள் சட்ட மன்றத்தில் கொண்டு வந்த தனித் தீர்மானத்தை ஆதரிப்பதோடு ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது.

தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பு என்பது மிகவும் வலுவான ஒன்றாக திகழ்கிறது இதற்காக நமது முதல்வர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி ஒரு நீண்ட நெடிய இலக்கத்தை நிர்ணயித்திருக்கிறது நமது திராவிட மாடல் அரசு.

பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போது அபார வளர்ச்சி பெற்றுள்ள தமிழ்நாட்டின் கல்லூரி கல்வி வளர்ச்சிக்கு இவ் விதிகள் கடிவாளம் போடும் விதமாகவும் ஆளுநர்களுக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறார்கள்.

பல்கலைகழங்களில் முற்போக்கும் அறிவியல் மனப்பான்மை கொண்ட துணைவேந்தர்களை தேர்வு செய்வதையும் சமூக நீதியையும் தவிர்ப்பதற்காக மாநிலங்களை கலந்தாலோசிக்காமல் ஆளுநர்களே நேரடியாக நியமித்துக் கொள்ளலாம் என ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது துறை அறிவிப்பில் தெரிவித்திருக்கிறார்.

அதே போல் ஆளுநரின் பதவிக் காலம் மூன்றாண்டுகளில் இருந்து ஐந்து தாண்டுக்கு நீட்டிப்பு செய்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசை முடக்கவும் நினைக்கிறார்கள்.

ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யாமல் பல்கலை கழகங்களை முடக்கும் ஒன்றிய அரசு மாணவர்களின் உயர் கல்வியை சிதைக்க முயல்வதோடு ஆளுநர் அரசியல் செய்ய வழி வகையையும் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார்கள்.

உயர்கல்வி தொடர்பான இது போன்ற U.G.C விதியானது அரசியலமைப்பு சட்டத்தின் ஒன்றிய பட்டியலில் இல்லை. பொதுப்பட்டியலில் தான் இருக்கிறது. பொதுப்பட்டியலில் இருக்கும் ஒரு சட்டத்தில் தன்னிச்சையாக பாசக அரசு முடிவெடுப்பது எதேச்சிகரமானது

இது மாநில அரசுகளை மட்டுமல்ல கல்வியையே சிதைக்கின்ற நடவடிக்கை ஆகும். ஆதலால் ஆளுநரின் அதிகாரங்கள் பறிக்கப் பட வேண்டும்.

என்பதோடு ஒன்றிய அரசின் U.G.C வரைவு விதிகளை திரும்ப பெற வலியுறுத்தி தமிழ்நாடு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் கொண்டு வந்த தனித் தீர்மானத்தை ஆதரிப்பதோடு வரவேற்கிறது என்பதையும் ஆதித்தமிழர் பேரவை சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு இரா.அதியமான் தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. மாணவர் அணி – ஊசுடு தொகுதி தி.மு.க. சார்பில்

# மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## அமைப்பாளர் இரா. சிவா அறிக்கை!



புதுவை, ஜன. 23-

புதுச்சேரி மாநில தி.மு.க. மாணவர் அணி மற்றும் ஊசுடு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கான விரவணக்க நாள் பொதுக்கூட்டம் 25-ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு குருமாம்பேட்டில் நடக்கிறது.

மாநில மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.பி. மணிமாறன் தலைமை வகிக்கிறார். ஊசுடு தொகுதி செயலாளர் பி.சா. இளஞ்செழியப்பாண்டியன், தொகுதி அவைத் தலைவர் இரா. கண்ணன் மற்றும் தொகுதி நிர்வாகிகள் முன்னிலை வகிக்கிறார்கள். தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எம்.பி. லோகையன் வரவேற்றுப் பேசுகிறார்.

தலைமைக் கழக சொற்பொழிவாளர் கந்திலி கரிகாலன், புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா, தலைமைக் கழக பேச்சாளர் குடந்தை ராமகிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரை ஆற்றி, மொழிப்போர் தியாகிகளுக்கு பொற்கிழி வழங்கி கவுரவிக்கிறார்கள்.

தொடர்ந்து மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி. சி.பி. திருநாவுக்கரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், எல். சம்பத் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

மாநில கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் உத்திராபதி நன்றி கூறுகிறார்.

மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கண்ணன், ஸ்டீபன்ராஜ், ஸ்ரீஹரி, அமுதன், கீர்த்தி எழினி, தமிழ்மகள் ஜான்சி ராணி, முத்தரசன் மற்றும் ஊசுடு தொகுதியில் உள்ள மாநில நிர்வாகிகள் மதிவாணன், வீரராகவன், முருகையன், அரிதாஸ், தேவநாதன், கலியமூர்த்தி, விஜி (எ) வெங்கடேசன், சுமித்ரா, அனந்தராமன், அய்யனார் ஆகியோர் ஏற்பாடு செய்கின்ற மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் வரலாற்று சிறப்புமிக்க இந்த கூட்டத்தில், மாநில கழக நிர்வாகிகள், மொழிப்போர்த் தியாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், தொகுதி செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு இரா.சிவா தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா ஏ.வி. சுப்பிரமணியன்

### சனவரி 23 (2014)



**தஞ்சை மண்டலத்தில் கழகம் வளர்க்கப் பாடுபட்டவர். மதுக்கூர் ஒன்றியச் செயலாளராக 27 ஆண்டுகள் பணியாற்றி, ஏராளமான கழகத் தோழர்களுக்கு தோன்றாத் துணையாய் நின்று பாடுபட்டவர்.**

**11வது கழக அமைப்புத் தேர்தலில் தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றியவர். பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் இருந்தவர்.**

**ஆலத்தூர் ஊராட்சித் தலைவராகவும், மதுக்கூர் ஒன்றியப் பெருந்தலைவராக இரண்டு முறையும், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.**

**'மிசா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்ததுடன், கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**